DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.44/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | கார்த்திகா (Lw - 3) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

(எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355**-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

முதல் விசாரணை **Date : 17.02.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் அலங்காநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். 13.08.2022ம் தேதி மாலை சுமார் 05.15 மணியளவில் நான் அலங்காநத்தம் பிரிவில் இருக்கும் எனது வீட்டின் முன்பு இருந்தேன். அங்கு சாட்சி - 2 செல்வராணி செடிகளுக்கு தண்ணீர்விட்டு கொண்டிருந்தார். அப்போது நாமக்கல் டு துறையூர் சாலையில் நாமக்கல் பக்கம்இருந்து டேங்கர் லாரி வேமாகவும், தாறுமாறாகவும் தாழ்வான பகுதியில் வந்து அதே சாலையில் எதிர் திசையில் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி மேலும் வந்து அங்கு இருந்த வேப்பமரத்தில் மோதி மேலும் வந்து அ.சா.2 செல்வராணி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. செல்வராணிக்கு காலில் காயம் ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தில் வந்த நபர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். டேங்கர் லாரியின் பதிவு எண் எனக்கு தெரியவில்லை. ஆனால் அது கேஸ் வண்டியாகும். விபத்தை ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரை நான் பார்த்தேன் அவர் உயரமாகவும், குண்டாகவும் இருப்பார். அவர்

நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. (எதிரி தரப்பில் எதிரியின் அடையாளம் குறித்து ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.) நான் உடனே அ.சா.2 செல்வராணியை சிகிச்சைக்காக ஆதிரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மேல் சிகிச்சைக்காக செல்வராணி நாமக்கல் மாருதி மருத்துவமனைக்கு சென்றார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

(எதிரி தரப்புக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**